# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10


> மனிதனால் ஆவது எதுவுமில்லை; கடவுளால் ஆகாதது எதுவுமில்லை.
>
> — காந்திஜி


மலர் 12 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 105) 1975 யூலை | இதழ்—10


## சர்வோதய நோக்கில்

# ஜெ.பி. யின் போராட்டம்

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இன்று இந்திய அரசியலில் நிகழ்த்தி வரும் போராட்டங்கள் பற்றி பலவாறாக விமர்சிக்கப்படுகின்றன. சர்வோதய வாதியான அவர் அகிம்சைக்குப் புறம்பான வன்செயல்களுக்கு இடமளிக்கலாமா? என்று குரல் எழுப்பும் சர்வோதய அநுதாபிகள் ஒருபுறம். அதே நேரத்தில் ஜெ. பியின் செயல் பாஸிசப் போக்குக்குரியது. இது முதலாளித்துவத்துக்கு ஆதரவான பிற்போக்காளரின் எதிர்ப்புரட்சி' என்று கூக்குரலிடும் ஆத்மீக வாதிகளல்லாத மார்க்ஸீய வாதிகளின் கண்டனம் மறுபுறம்.

இரண்டு சாராரின் கேள்விகளிலும் நியாயம் இருக்கிறது. காரணம் இதுகாலவரை' சர்வோதயம்' 'அகிம்சை' போன்ற சொற்றொடர்கள் ஒருமுகப்பட்ட தப்பான அர்த்தத்திலேயே நிலவுகிறது. ஆகவே ஜெ. பியின் போராட்டம் சர்வோதய அநுதாபிகள் பலருக்கு சர்வோதயத்துக்குப் புறம்பானதாகவும் வன்முறையுடையதாகவும் தெரிகிறது. இதற்குப் பரிகாரம் தேடும் அவர்கள் 'ஜெ. பி இந்தியச் சர்வோதய இயக்கத்திலிருந்து விலகியே தனது போராட்டத்தை நடத்துகிறார்' என்று மன அமைதி பெறுகின்றனர்.

அடுத்து மார்க்ஸீய வாதிகளின் குற்றச் சாட்டு. இதற்குக் காரணம் பழைய காங்கிரசை விட சோஷலிச அமைப்பில் நம்பிக்கை வைத்து முன்னேறும் இந்திரா காந்தியின் அரசை ஜே. பி எதிர்ப்பது அவர்களுக்குப் பிற்போக்காகவே படுகிறது. இதை உறுதிப்படுத்துவது போல் ஜே. பியின் போராட்ட கூடாரத்துள் ஜனசங் போன்ற படு துவேஷ பிற்போக்குச் சக்திகளும் ஒதுங்கியுள்ளன. இதனால் பல தர்மத்துக்கு எதிரான சக்திகளுக்கு ஜே. பி அபயம் அளிப்பது போல அவர்களுக்குப்படுகிறது; அது நியாயமானதே

ஆகவே சர்வோதயவாதிகளினது அகிம்சை பற்றிய சந்தேகமும் மார்க்ஸிய வாதிகளின் குற்றச்சாட்டும் விளக்கப்பட வேண்டும்.

ஜே. பியின் போராட்டம் சர்வோதயத்துக்கும் அகிம்சைக்கும் ஏற்புடையதா?

அகிம்சைப் போராட்டம் என்பது அதை நடத்துவோன் நிற்கும் சத்திய தளத்தையும் அதன் சத்திய வலுவையும் பொறுத்து மாறுபடும்.

ஆயுதம் ஏந்தாது பிறருக்கு இம்சை செய்யாமல் போராடுவது ஒருவகை. ஆயுதம் ஏந்தி பிறரைக் கொலை செய்தும் அகிம்சைப் போராட்டத்தை நடத்துவது இன்னொரு வகை.

அத்தோடு ஆயுதம் ஏந்தாத போராட்டத்திலும் சரி, ஆயுதம் ஏந்திய போராட்டத்திலும் சரி பிற உயிர் (அதாவது எதிரி) இம்சைப்படவே செய்கிறது. காந்தியின் ஒத்துழையாமைப் போராட்டத்தால் வெள்ளைக்கார ஆட்சியாளர் தம் திட்டங்கள், ஆசைகள் எல்லாம் தோற்கடிக்கப்பட்டதால் மனதால் இம்சைப்படவே செய்தனர். அன்பு வேண்டுகோளுக்கு மனதை மாற்றாத எதிரி ஆயுதம் ஏந்தாத போராட்டத்தினாலும் இம்சைப்படவே செய்கிறான். ஆயுதம் ஏந்திய அகிம்சைப் போராட்டத்தில் எதிரியின் மனமும் உடலும் இம்சைப்படுகின்றன. ஆகவே இம்சை இரண்டு வகையான போராட்டத்திலும் தரவித்தியாசத்தில் இடம் பெறவே செய்கிறது. ஒருவிதத்தில் எதிரியின் திட்டங்களைப் பாழாக்கி மனதை வருத்துவதென்பது ஆயுதத்தால் உடலை வருத்துவதைவிடக் கொடியதாகவும் சிலருக்கு அமையலாம். ஆகவே இம்சையின் தரங்கள் கூட ஆளுக்காள் (எதிரியின் தன்மைக்கேற்ப) மாறுபடலாம்.

ஆகவே ஆயுதம் ஏந்திய போராட்டத்தையும் ஆயுதம் ஏந்தாத போராட்டத்தையும் அகிம்சைப் போராட்டமாக்குவது போராட்டத்தை நடத்துவோனின் சத்திய வலுவையும் தர்ம நோக்கையும் பொறுத்தது.

சத்திய வலுவென்பது எதிரிக்குத் தன்னால் ஏற்படும் மன, உடல் துன்பங்களை எல்லாம் ஆன்சத்திய வலுவென்னும் ஓமாக்கினியில் தீய்த்துவிடுவதே. அதாவது தான் என்ற முனைப்பொழிந்து இறைவனின் பூரண பிரஜையாகி இறைவனைத் தன் மூலம் தொழிற்படவிடுவது' இறைவனின் தொழிற்பாட்டில் அகிம்சை யேது? இம்சை யேது? எல்லாம் அன்பினாலேயே நடத்தப்படுகிறது. எதிரியையும் அன்பு கொண்டே அழிக்கிறான். அதுவும் காலத்தின் தர்மப் போக்கை அனுசரித்தே நடைபெறுகிறது.

இந்த நோக்கில் குருஷேத்திரத்தில் கண்ணன் நிகழ்த்தியதும் அகிம்சைப் போராட்டமே, முகமது நபி எதிரிகளுக்கு எதிராக வாளேந்தியதும் அத்தகையதே. அதனால் தான் பங்களாதேஷ் பிரிவினை யுத்தத்தில் இந்தியா ஈடுபட்டதை விநோபா அவர்கள் 'அகிம்சையின் உன்னத நிலை' என்றார்

(NON VIOLENCE OF THE HIGHER ORDER)


(2 ஆம் பக்கம் பார்க்க)

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 105
1975 யூலை

# சமத்துவம்

சென்ற இதழ்க் கட்டுரையில் அகிம்சை இன்பம் என்ற பொருள் பற்றி எழுதி இருந்தோம். முடிவில் சிந்தனை இன்பம் என்பதின் உயர்வினைக் கூறியிருந்தோம். இன்றைய கட்டுரையில் சமத்துவம் என்பதன் உண்மையான கருத்தைச் சிறிது பகுத்து ஆராய்வோம்.

சமதர்மம், பொதுவுடைமை, சோசலிசம் என்றெல்லாம் பொதுவாகப் பேசப்படுகின்றது. இவற்றின் குறிக்கோள் எல்லோரும் ஒத்த முறையில் நுகர்வு, சேவைப் பங்கீடுகளைப் பெற வேண்டுமென்பதாகும்.

உணவில் ஒப்புடைமை வேண்டும். சிறப்பான உணவை ஒருவர் பெற்றால் மற்றவரும் பெற வேண்டும். உடை வசதிகளிலும் ஒத்த வசதி வாய்ப்பினை இவர்கள் பெறவேண்டும். குடியிருப்பு வசதிகளிலும் ஒத்த வாய்ப்பினை எல்லோரும் பெறவேண்டும், சுகாதாரம், கல்வி, உத்தியோக வாய்ப்பு எல்லாவற்றிலும் ஒத்த வசதிகளைப் பெறவேண்டும். இது சமதர்ம நோக்கு. இவை எல்லாவற்றையும் ஓர் அரசு நலல ஆட்சி முறைமையினால் எல்லாக் குடிமக்களுக்கும் திறம்படச் செய்து முடிக்கலாம்.

இந்தக் காரணிகள், உணவு, உடை, உறையுள், சுகாதாரம், கல்வி, உத்தியோகம் எல்லாம் அரசாங்கத்தினால் திட்டமிடப்பெற்று முடிக்கப் படக் கூடியவை. அரசின் ஆட்சிக்குள் அடங்கக் கூடியவை. எனவே இவை எல்லாம் நிறை வேற்றப்பட்டன என்று கொள்வோம். பின்னர் உண்டாகும் நிலையில் மனிதருக்குள் நிலவக் கூடிய ஏற்றத்தாழ்வுகள் மறைந்து விடுமா?

மனிதன் தானாகப் படைத்துக் கொண்ட ஏற்றத் தாழ்வுகளைப் போக்கலாம். இயற்கையாக ஒருவனிடம் ஏற்படும் விவேகம், அழகு, அயரா உழைப்பு, நற்சுபாவம் ஆகியவற்றை எவ்வாறு பங்கிடலாம். ஒருவர் நுண்மதி உடையராக விளங்க மற்றவர் மந்தமாக விளங்குகிறாரே. ஒருவர் குரல் இசைக்கு, உவந்த தாயிருக்க மற்றையவர் கர்ண கடூரக் குரலில் விளங்குகிறாரே என்ன செய்வது? ஒரு பெண் எல்லா உடல் வனப்பும் பெற இன்னொருத்தி மிக அவலட்சணமாக விளங்குகிறாளே மரபுவழியிலோ, இயற்கையாகவோ ஏற்பட்ட இவ்வகை நயங்களை, உடைமைகளைப் பொதுவுடைமையாக்குதல் எப்படி? சிலர் இதை ஒரு வீம்பான முட்டாள் கேள்வி என்று நினைக்கலாம். இக் கேள்வி நாம் படைக்க விரும்பும் எதிர் காலச் சமுதாயத்தைப் பற்றி மிக அடிப்படையான கேள்வியை எழுப்புகின்றது.

இதற்கு ஓர் உதாரணம் காட்ட விரும்புகிறேன். இதுவரை ஒரு குடும்பத்தில் எத்தனை பிள்ளைகள் தான் பெறலாம் என்று கட்டுப்பாடில்லை. ஒரு குடும்பத்தில் நாலு பிள்ளைகள் பிறந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாலு நாலு பிறக்குமேயானால் ஒரு தகப்பனுக்கு அவன் வயதான காலத்தில் 20 பேரின் துணை, பக்கபலம், சொத்துதவி சேர்கிறது. இவர்களுட்பலர், செல்வராய், வைத்தியராய், எஞ்சினியராய் இருந்தால் இந்தக்குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் குடும்பத்தின் மொத்த செல்வாக்கினையும், பக்க பலத்தையும் அனுபவிக்கக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். தனியனாய்ப் பிறந்து தனிமகன் பெற்றவர்கள் இவர்கள் அளவு செல்வாக்கை அனுபவிக்க முடியாது. இது ஏற்றத்தாழ்வல்லவா? எனவே, நாட்டில் ஒப்புவமையை வளர்க்கவேண்டுமானால் ஒவ்வொரு மனிதனுக்கும் எத்தனை பிள்ளைகள் தான் இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடும் வேண்டும் அல்லவா?

இது நிற்க தேகபலம், புத்திக் கூர்மை, பிரயாசை போன்ற ஆற்றல்களை எவ்வாறு மக்களிடை சமமான முறையில் பங்கிடலாம். இதை அவர்கள் மரபுரிமையாகப் பெறும், 'ஜீன்' களை மாற்றுவதன் மூலம் செய்யலாம் என்று சில விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். இதை 'ஜெனற்றிக் என்சினீரிங்' என்று அவர்கள் சொல்கிறார்கள்.

இந்த முறையில் எல்லோரையும் ஓர் நிறம், ஓர் எடை, ஓர் குணம் என்று ஆக்கலாம். இதனால் உலகில் போட்டி பொறாமை இருக்காது என்பது உள் கருத்து

இவ்வாறாக மனிதரிடைஎழும் ஒப்பின்மையை, சமமின்மையை எல்லாத்துறைகளிலும் நாம் போக்கிக் கொண்டு போவோமேயானால் ஆகும் பலன் யாது? மன ஒருமை. போட்டி பொறாமை யற்ற மனம்; அதாவது சலனமற்ற மனம். உண்டாகும் இதுவே சித்த விருத்தியைக் குறைப்பதற்கான முதற்படி. இவ்வாறாக ஒரு சமதர்ம சமுதாயத்தின் இறுதி நோக்கத்தை நாம் ஆராய்வோமானால், மனதில் போட்டி பகைமை இல்லாத ஒரு சமுதாயத்தை உண்டாக்குவதே நோக்கம் என்பது புலப்படும்.

ஆனால் எல்லோரும் ஒரே தன்மையான குணப்பண்புகள், ஆற்றல்கள் உடையவர்களாய் வாழ முடியுமா? விஞ்ஞானத்தினால் இதை நிறுவ முடியுமா? அத்தகைய ஒரு நிலை வந்தாலும் பின்னரும் போட்டி, அவா மிகுந்தே நிற்கும்.

சமதர்மத்தின் வரலாற்றையும் எதிர்காலத்தையுப் நோக்கும் போது, 'மனம் என்ற தன் போக்கிலேயே அது தங்கியிருப்பதை நாம் காணலாம். பசி, பட்டினி, பொருளாதாராப் பற்றாக் குறை இவற்றால் வரும் போட்டி பொறாமைகளை நீக்கினாலும், பட்டம் பதவி, புகழ், அதிகாரம் இவற்றாலும் சமமின்மை ஏற்பட்டு போட்டி பொறாமை உண்டாகி சச்சரவு ஏற்படுமே? அதற்கென்னசெய்வது?

இவற்றிலிருந்து நமக்குப் புலப்படுவது என்ன? பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் அதே வேளையில், பொருளாதாரச் சீரின்மை எழுப்பிய மனப் பதற்றத்தை நிதானப்படுத்தி, மனத்திலிருந்து, ''அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல்'' இவற்றை நாம் கட்டாயம் அகற்ற வேண்டும் என்பது தோன்றவில்லையா?

இதை நாம் மனதில் செவ்வையாக இருத்தியபடியே சமதர்ம வழியில் இறங்க வேண்டும். இத்தகைய ஒரு சம நோக்கில் தான் ''சிந்தனை இன்பம்'' தோன்றும்.

இதிலிருந்து தோன்றுவது என்ன? பொளாதாரப்புரட்சியோடு தத்துவமறிந்த உள்ளமும், பகைமையற்ற உறவும் மக்களிடை அவசியம் நிலவ வேண்டுமென்பதாகும். எந்தச்சமூக உயர் நிலைக்கும் சுத்தமான மனம் அடிப்படையாக அமையவேண்டும். இன்றேல் புரட்சி வீண் உட்பகையாகவே முடியும்.

— இ. இ

( 1 ஆம் பககத் தொடர்ச்சி)

இவற்றின் பின்னணியில் தான் ஜே. பியின் போராடத்தைப் பார்க்க வேண்டும்,

ஜே. பியிடம் சத்திய வலு இருக்கிறதா? இருக்கலாம். ஆனால் அந்த வலு, இவரின் போராட்டத்தால் நிகழும் எல்லாவித வன்முறை, தீமைகளையும் (நன்மைகளையுந்தான்) எரிக்கும் வலுவுடையதாகவும் அதே நேரத்தில் இவர் கூடாரத்துள் ஒதுங்கியிருக்கும் பிற்போக்குச் சத்திகளுக்கும் தீட்சைகொடுத்து தர்மப் பக்கம் ஆற்றுப்படுத்தும் வலுவுடையதாகவும் இருக்கிறதா? அத்தோடு அவர் காட்டும் வழி இப்போ இருக்கும் வழியை விடச் சிறப்புடையதா? அப்படியெனில் இன்று இந்திரா அரசு காட்டும் வழியை விட தெளிவும் சிறப்பும் கொண்டதாக இருக்கிறதா?

இவைதான் ஜே. பியின் போராட்டத்தின் அகிம்சை, இம்சை, தர்ம, அதர்மம் போக்கை அளக்கும் தர்ம அளவுகோல்.

காலம் பதில் சொல்லும்

—மு. பொன்னம்பலம்

## சம்பத்துத் தானம்

இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக 1975 சனவரி தொடக்கம் யூன் வரை (ஆறுமாதங்கள்) சம்பத்துத்தானம் அளித்தவர்கள்

தெகிவளை

இரத்தினகார இடம்

| | ரூ | ச |
|---|---|---|
| திருமதி. கா. சங்கரப்பிள்ளை | 4 | 00 |
| ,, எ. அமிர்தானந்தன் | 9 | 00 |
| '' செல்வகாந்தன் | 1 | 00 |
| '' ம. கனகலிங்கம் | 12 | 00 |
| ,, எஸ் .கனகசிங்கம் | 15 | 00 |
| '' நா. இரத்தினசிங்கம் | 10 | 00 |
| '' ஆர். சிதம்பரநாதன் | 6 | 25 |
| '' வை. பொன்னம்பலம் | 4 | 00 |
| '' வ. இரத்தினம் | 2 | 00 |
| ,, க. க. சுப்பிரமணியம் | 5 | 00 |
| '' செ. செல்வரத்தினம் | 4 | 00 |
| '' நா. வரதராசா | 1 | 00 |
| **ஆஸ்பத்திரி வீதி** | | |
| திருமதி. மார்க்கண்டு | 6 | 00 |
| '' துரைராசா | 2 | 00 |
| **டி சொய்சா அவென்யூ** | | |
| '' சு. பத்மராஜா | 1 | 00 |
| **வெள்ளவத்தை நகரசபை வீடுகள்** | | |
| திரு. எஸ். வயித்திலிங்கம் | 12 | 00 |
| '' எஸ். பி. சோமசுந்தரம் | 5 | 50 |
| **காலி வீதி** | | |
| திருமதி. எஸ். விவேகானந்தன் | 6 | 00 |
| '' பொ. அட்சரமூர்த்தி | 10 | 00 |
| '' சி. சின்னத்துரை | 2 | 00 |
| ,, இராசசுந்தரம் | 2 | 00 |
| ,, நா. ஐயாத்துரை | 12 | 00 |
| செல்வி. உமா- குகதாசன் (ஞாபகார்த்தமாக) | 12 | 00 |
| **இராமகிருஷ்ணவீதி** | | |
| திருமதி. எஸ். சிவப்பிரகாசம் | 8 | 50 |
| ,, பொ. இராசநாயகம் | 11 | 00 |
| '' த. இராசரத்தினம் | 2 | 00 |
| '' இ. நடராசா | 7 | 00 |
| ,, ர. குலேந்திரன் | 17 | 10 |
| ,, சி. சிவஞானப்பிரகாசம் | 8 | 00 |
| ,, க. கணபதிப்பிள்ளை | 3 | 00 |
| '' குல. சபாநாதன் | 2 | 00 |
| '' இ. தியாகராஜா | 13 | 00 |
| ,, ம. சிங்கம் | 6 | 00 |
| ,, த. சிவகுருநாதன் | 2 | 00 |
| ,, க. கணபதிப்பிள்ளை | 3 | 00 |
| '' உ. குகதாசன் | 6 | 00 |
| ,, க. வெங்கடாசலம் | 3 | 31 |
| '' ச. கணேஸ்வரன் | 2 | 00 |
| '' சி. சச்சிதானந்தம் | 8 | 00 |
| '' சி. சுப்பிரமணியம் | 5 | 00 |
| திருமதி. தி. நடராசா | 8 | 00 |
| ,, எஸ். பி. யோசப் | 1 | 00 |
| ,, கணேசன் | 2 | 00 |
| **ஈ எஸ் பெர்ணந்து மாவத்த** | | |
| திருமதி. வி .பரராசசேகரம் | 8 | 50 |
| ,, குமாரசாமி | 13 | 00 |
| '' என். கந்தசாமி | 17 | 00 |
| '' எம். நேசதுரை | 12 | 00 |
| '' விசாகப்பெருமாள் | 5 | 00 |
| '' நடராசா | 12 | 00 |
| ,, கனகசபை | 3 | 00 |
| **36 ஆவது ஒழுங்கை** | | |
| திருமதி. பீ. ஆறுமுகம் | 10 | 00 |
| செல்வி. யசோதா. சுப்பிரமணியம் | 60 | 00 |
| திருமதி. நவரத்தினம் | 3 | 00 |
| ,, பவானந்தன் | 10 | 00 |
| ,, கனகலிங்கம் | 3 | 00 |
| '' கணேசன் | 1 | 00 |
| **லெவசற்பிளேஸ்** | | |
| திருமதி. ம. குணதிலக்க | 5 | 00 |
| **புகையிரதநிலையவீதி** | | |
| திருமதி. ஆ. குணநாயகம் | 10 | 00 |
| **விவேகானந்த வீதி** | | |
| செல்வன் சஞ்சீவன்-சிவலிங்கம் | 30 | 00 |
| திருமதி. எஸ். ஆறுமுகரத்தினம் | | |
| '' எஸ். இராசையா | 8 | 00 |
| '' சுந்தரம்பிள்ளை | 3 | 00 |
| '' எம். பாலசுப்பிரமணியம் | 5 | 00 |
| '' ப. கண்ணுத்துரை | 7 | 00 |
| '' யோ. திருச்செல்வம் | 6 | 00 |
| '' அ. தேவதாசன் | 4 | 00 |
| '' யோ. தியாகராசா | 1 | 00 |
| '' ரதினி-பண்டாரநாயக்க | 4 | 00 |
| '' க. கந்தசாமி | 3 | 00 |
| '' பி. அருமைநாயகம் | 50 | 00 |
| செல்வி. பேரம்பலம் | 2 | 00 |
| **நெல்சன் பிளேஸ்** | | |
| செல்வி. யசோதா தனபாலசிங்கம் | 5 | 00 |
| **அலெக்சாந்திராபிளேஸ்** | | |
| திருமதி. சிற்றம்பலம் | 5 | 00 |
| '' காராளசிங்கம் | 10 | 00 |
| '' எஸ். கந்தையா | 9 | 00 |
| '' எஸ். பி. செல்வரத்தினம் | 4 | 00 |
| '' பரமேஸ்வரன் | 5 | 00 |
| **மனிங் பிளேஸ்** | | |
| திருமதி. இ. ஜெர்மையா | 6 | 00 |
| '' க. இராசலிங்கம் | 30 | 00 |
| '' நவரத்தினம் | 4 | 00 |
| **ஹம்டன் லேன்** | | |
| திருமதி. ம. பரஞ்சோதி | 6 | 00 |
| **53 ஆவது லேன்** | | |
| '' ப. இராசமாணிக்கம் | 6 | 00 |
| **55 ஆவது லேன்** | | |
| திருமதி. இ. சற்குணநாயகம் | 5 | 00 |
| **பசல்ஸ் லேன்** | | |
| '' இராஜேஸ்வரி-முதலியார் | 5 | 50 |
| **இராசவல்லிலேன்** | | |
| '' வேலாயுதபிள்ளை | 8 | 00 |
| **தயாவீதி** | | |
| '' ப. இரத்தினசபாபதி | 5 | 50 |
| '' செ. இரத்தினுதிக்கம் | 4 | 00 |
| **பாக் வீதி** | | |
| '' சி. கிருஷ்ணசாமி | 18 | 00 |
| **சொலமன் அவென்யூ** | | |
| '' மு. கைலாசபிள்ளை | 5 | 00 |
| **கல்யாணி வீதி** | | |
| திருமதி. இ. இரத்தினம் | 18 | 00 |
| '' திருநாவுக்கரசு | 6 | 00 |
| '' ச. வே. கந்தசாமி | 6 | 00 |
| '' எஸ். இரத்தினம் | 2 | 00 |
| '' எஸ். தணிகாசலம் | 6 | 00 |
| '' நா. தனபாலசிங்கம் | 10 | 00 |
| '' சீவரத்தினம் | 2 | 00 |
| '' எம். கார்த்திகேசு | 1 | 00 |
| **ஹரிச்சந்திராமாவத்த** | | |
| திருமதி. ம. நடராசா | 8 | 00 |
| '' ம. கனகசபை | 6 | 00 |
| '' க. குமாரசாமி | 12 | 00 |
| '' ச. மாணிக்கவாசகர் | 3 | 00 |
| '' த. மகாதேவன் | 5 | 00 |
| **டபிள்யூ. எ. சில்வாமாவத்த** | | |
| திருமதி. தி. கந்தசாமி | 8 | 00 |
| '' தா. கணேந்திரநாதன் | 14 | 00 |
| '' சொ. இராசநாயகம் | 9 | 00 |
| செல்வி. தேவகி—செல்லப்பா | 12 | 00 |
| **பாமன்கட** | | |
| திருமதி. ஸ்ஹமலதிசோமசேகரம் | 22 | 00 |
| ''செ. காராளசிங்கம் | 6 | 00 |
| '' ம. முத்துத்தம்பி | 12 | 00 |
| '' வி. மணி | 6 | 00 |
| **சாலிமென்ற் வீதி** | | |
| திருமதி. இ. சதாசிவம் | 5 | 00 |
| '' எ. எஸ். நடராசா | 14 | 00 |
| '' சின்னத்தம்பி | 20 | 00 |
| '' வி. சுந்தரம் | 2 | 00 |
| **ஈ. ஏ. குரேமாவத்தை** | | |
| திருமதி. பாலசுப்பிரமணியம் | 3 | 00 |
| '' ம. சோமசுந்தரம் | 7 | 02 |
| '' டெபி மார்டின் | 2 | 00 |
| '' இ. செல்லையா | 2 | 00 |
| **உலக பௌத்த நிலைய வீதி** | | |
| திருமதி. தெ. மகாலிங்கம் | 4 | 00 |
| '' ம. மகாலிங்கம் | 3 | 00 |
| '' தி. பொன்னம்பலம் | 12 | 00 |
| '' செ. திருநாவுக்கரசு | 1 | 00 |
| '' ரூபசிங்கம் | 3 | 00 |

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்பர் தபால்

சர்வோதய ஊழியர்கள் மாநாட்டில் கலந்து கொண்டமையால் காந்தீயத்திற்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட மகான்களைக் காணும் பேறு பெற்றேன்.

க.நடனசபாபதி,
செயலாளர்,
இயற்கைவள அபிவிருத்தி
இயக்கம், யாழ்ப்பாணம்.

★ ★ ★ ★

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வோதய ஊழியர் மாநாட்டிற்கு வரமுடியவில்லை, மாநாட்டு நிகழ்ச்சிகள் யாவும் வெற்றிகரமாக நடைபெற்றதை 'காந்தீயம்' பத்திரிகை மூலம் அறிந்துகொண்டேன். மிகவும் மகிழ்ச்சி.

சி. யோ. சந்தியாபிள்ளை
கட்டடத்திணைக்களம்
வதுளை

★ ★ ★ ★

1975 யூன் காந்தீயம் கிடைத்தது. கருத்துக் கருவூலமாயுள்ளது.

யாழ்ப்பாணம் க. விநாயகம்

★ ★ ★ ★

கடல் கடந்தும் காந்திய நெறிகள் உலகெங்கும் பரவுதல் தான் ஓர் உலகக் காட்சிக்கு வழிவகுக்குமென உறுதியாக நம்பும் நாம் இன்னும் வேகமாக அடிகளாரின் நெறிகளை வாழ்வில் மேற்கொண்டு வாழ்தல் மூலம் மற்றவர்களும் பின்பற்றும் நிலையினை உண்டாக்க வேண்டும். கடந்த 30 ஆண்டுகளாக அடியேன் இதனையே தவமென நோற்று வருகிறேன். உலகச்சூழல் மாற்றம் கண்டு வருவதாகவும் அஹிம்சை வழிப் பெருக்கம் எய்துவதாகவும் நினைப்பு. இலங்கையிலும் சிறப்புடன் செயலாற்றுகின்றமையை நினைந்து நினைந்து உள்ளம் பெருமிதம் காண்கிறது. மேலும் பெருகிச் சிறக்க ஆளுடை அம்மையப்பன் தாள் பணிகின்றனன்.

சா. தே. இராமச்சந்திரன்
செயலாளர்,

சர்வோதயமண்டல்,
கோயமுத்தூர்,
தமிழ்நாடு.

★ ★ ★ ★

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

| | | |
|---|---|---|
| திருமதி. யோ, சண்முகராசா | 12 | 00 |
| '' தனபாலசிங்கம் | 3 | 00 |
| '' த. கனகரத்தினம் | 4 | 00 |
| இந்து மகளிர் மன்ற இல்லம் | 1 | 00 |
| **ஹாமஸ் பிளேஸ்** | | |
| திருமதி. க. இராசரத்தினம் | 20 | 00 |
| திருமதி. க, இராசரத்தினம் | 20 | 00 |
| **பெரேரா ஒழுங்கை** | | |
| திருமதி. க. சோமசேகரம் | 8 | 00 |
| '' பி. நடராசா | 30 | 00 |
| **காசப்பா வீதி** | | |
| செல்வி. குந்தவை கதிர்காமநாதன் | 25 | 00 |
| **47 ஆவது ஒழுங்கை** | | |
| திருமதி. தவமணி | 7 | 00 |
| '' அருளம்பலம் | 7 | 00 |
| '' ச. பத்மநாதன் | 25 | 00 |
| '' இரத்தினசபாபதி | 12 | 00 |
| '' சிவசுப்பிரமணியம் | 6 | 00 |
| '' மாணிக்கம் | 9 | 00 |
| '' ச. தம்பிப்பிள்ளை | 6 | 00 |
| செல்வி. பொன்னுத்துரை | 1 | 00 |
| செல்வன். த. சோமவர்மன் | 2 | 00 |
| **பம்பலப்பிட்டி** | | |
| திருமதி. விநாயகமூர்த்தி | 5 | 00 |
| '' ஆறுமுகம் | 4 | 00 |
| '' ஆர். நல்லதம்பி | 4 | 00 |
| '' சுப்பிரமணியம் | 36 | 00 |
| '' செ. சின்னத்தம்பி | 12 | 00 |
| '' அம்பலவாணர் | 3 | 00 |
| '' செல்வத்துரை | 4 | 00 |
| திரு. இ இரத்தினம் | 10 | 00 |
| '' ச. பேரின்பநாயகம் | 25 | 00 |
| திருமதி. பொ. காராளசிங்கம் | 6 | 00 |
| '' ச. இராஜசிங்கம் | 6 | 00 |
| திரு. மு. பரமு | 6 | 00 |
| **கொள்ளுப்பிட்டி** | | |
| திருமதி.ம.நடராசா | 5 | 00 |
| **இரத்மலானை** | | |
| திருமதி. வி. சிங்காரம் | 11 | 00 |
| '' எஸ். சிவப்பிரகாசம் | 11 | 00 |
| '' என். யோகராசா | 10 | 00 |
| '' எ. ஸி. தாஹா | 6 | 00 |
| '' எம். பொன்னம்பலம் | 4 | 00 |
| **கல்கிசை** | | |
| செல்வி, சிதம்பரநாதர் | 6 | 00 |
| **வென்னப்புவ** | | |
| திரு, வி. பி. விஸ்வா | 2 | 00 |
| **வத்தளை** | | |
| செல்வி- லலிதாயோன்புள்ளே | 12 | 00 |
| **யாணழ்ப்பாம்** | | |
| திரு. வி. எம். பரமநாதன் | 50 | 00 |
| **உரும்பராய்** | | |
| டக்டர். க. சிவஞானரத்தினம் | 10 | 00 |
| **கேகாலை** | | |
| திரு. ஆ. விநாயகமூர்த்தி | 5 | 00 |
| '' கே. சீவரத்தினம் | 18 | 00 |
| '' சு. தர்மலிங்கம் | 4 | 00 |
| '' வி. பெருமாள் | 1 | 00 |
| **கொழும்பு - 11** | | |
| லோட்டஸ் ஸ்ரோர்ஸ் | 5 | 00 |
| யால்ரன் ஸ்ரோர்ஸ் | 5 | 00 |
| திரு. த. சீவரத்தினம் | 5 | 00 |
| செல்வி. இந்துமதி-செல்வத்துரை | 2 | 00 |

## வரவு செலவு

அகில இலங்கை காந்திசேவாசங்க கொழும்புக்கிளை, சர்வோதய நிகேதனம் [1975 சனவரி தொடக்கம் யூன் வரை ஆறுமாத]வரவு-செலவு விபரம்.

| | ரூ | ச |
|---|---|---|
| **வரவு** | | |
| கையிருப்பு | 62 | 18 |
| சர்வோதய பாத்திரம்- பணம் | 53 | 56 |
| '' அரிசி | 1088 | 40 |
| சம்பத்துத்தானம் | 1445 | 18 |
| கமம் | 46 | 22 |
| விடுதிக்கட்டணம் | 70 | 00 |
| காந்தீயம் | 137 | 00 |
| அச்சகநிதி | 20 | 00 |
| நாளுவிதம் | 2 | 00 |
| மொத்தம் | 2924 | 54 |
| **செலவு** | | |
| உணவு | 1237 | 61 |
| பிரயாணம் | 195 | 25 |
| கோகுலம் | 185 | 40 |
| உபகரணம் | 15 | 05 |
| சலவை | 91 | 15 |
| சலூன் | 13 | 00 |
| ஏற்ற-இறக்க | 70 | 00 |
| கமம் | 12 | 13 |
| வெளிச்சம் | 42 | 84 |
| வயித்தியம் | 6 | 85 |
| மாணவர் செலவு | 202 | 60 |
| விழா | | 20 |
| காந்தீயம் | 318 | 30 |
| சம்பளம் | 240 | 00 |
| திருத்தம் | 8 | 45 |
| தபால் | 30 | 85 |
| அச்சகம் | 12 | 25 |
| அச்சகக்கட்டணம் | 120 | 00 |
| கடன்( திருப்பிக்கொடுத்தது) | 100 | 00 |
| கையிருப்பு | 22 | 61 |
| மொத்தம் | 2924 | 54 |

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.